**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 7/2025**

**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. லிங்கபாண்டியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அங்குச்சாமி** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **46** |
| | | | **Dated** | : | **23.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்7/2025டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

கூடுதல் சாட்சி – 1, **திரு. லிங்கபாண்டியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அசா. 8 ஆக விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் மற்றும் பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர் திரு. ராஜசேகர் ஆகியோர்களது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 11.04.2018ம் தேதி 21.40

மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்றதில் மேற்படி காயம்பட்ட நபர் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால், 12.04.2018 ம் தேதி காலை 06.00 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கோபிநாதன், த/பெ. பழனிச்சாமி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று, அன்றை தினம் 08.00 மணிக்கு நிலையம் வந்து திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய குற்ற எண். 245/2018, சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) இ.த.ச வாக வழக்கு பதிவு செய்துள்ளார். **மேற்படி புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. மேற்படி வழக்கு கோப்பினை அப்போதைய பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் அவர்கள் அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சின்னச்சாமி மற்றும் துளசி மணி ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துளார். **மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ. 7 மற்றும் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. பின்னர் சாட்சிகள் கோபிநாதன் என்பவரை மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று விசாரணை செய்தும், சூரியா, அருண், சுபாஷ், முரளிதரன், சீனிவாசன், ஹரிஹரன், சின்னச்சாமி, துளசிமணி, சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் 12.04.2018 ம் தேதி 14.30

மணிக்கு திண்டுக்கல், தோமையாபுரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரிகளைக் கைது செய்து, சாட்சிகள் விஜயகுமார் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் எதிரி அசோக்குமார் என்பவரை விசாரிக்க அவர் அளித்த ஒப்புதல் வாக்கமூலத்தினை பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்பபுதல் வாக்கமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான, " என்னை அழைத்துச் சென்றால் நாங்கள் கோபிநாதனை குத்தின இடத்தை அடையாளம் காட்டியும், கோபிநாதனை குத்த பயன்படுத்திய கத்திகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தினை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன்", என்ற பகுதி மட்டும் **அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தோமையாபுரம், பூதமரத்துப்பட்டி பிரிவு, வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள புதரில் மறைத்து வைத்து எடுத்து ஆஜர் செய்த கத்திகள் – 2 ஐ மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 16.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **மேற்படி கத்திகள் – 2 சா.பொ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான விஜயகுமார் மற்றும் முருகன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து, எதிரிகளை திரேக பரிசோதனை செய்து, பாரா வசம் ஒப்படைத்து, தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் அன்றைய தினமே மேற்படி எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய சொத்துக்களை படிவம் – 91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **மேற்படி படிவம் – 91 அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை நிலைய ஆய்வாளர் திரு.

ராஜசேகர் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் மேற்படி வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திரு. ராஜசேகர் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் இதற்கு முன் விசாரணை செய்த ஆய்வாளரிடம் சொன்னதையே சொன்னதால் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் 14.06.2018 ம் தேதி மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திருமதி. சுகன்யா அவர்கள் மற்றும் 18.06.2018 ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. விஜயசந்தர் அவர்களை விசாரணை செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்று, வாக்கமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் விசாரணையின் அடிப்படையில் அன்றைய தினமே வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 342, 307, 506(ii) இ.த.ச. வில் இருந்து, சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) r/w 34 இ.த.ச. வாக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 18.06.2018 ம் தேதி மேற்படி எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) r/w 34 இ.த.ச. வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் அசா. 1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது என்றால்

சரியல்ல. நான் சொன்னது போன்று சாட்சிகள் 161 குவிமுச வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், வழக்கு சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எந்த ஒரு எதிரியும் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளால் அசா. 1க்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 23.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.23 14:50:44 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.